இருந்துக் கொண்டிருக்கிறது. அதை மாற்றியமைத்து, அவர்களுக்கு எல்லாம் தள்ளுவண்டி வழங்கும் திட்டத்தினை முழுமையாகக் கொண்டுவர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனித் கேள்வி போட்டால், விரிவான விடை அளிக்கப்படும்.

## குடிசைப்பகுதிகளுக்கு மருத்துவ வசதி

* வினா எண். 237— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைவாசிகளுக்கு வீட்டு வாயிலிலேயே மருத்துவ வசதி செய்யப்படும் திட்டம் மாநிலத்தில் எங்கெல்லாம் செயல்படுகிறது ?

(ஆ) கோவை நகர குடிசை வாசிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) தமிழகத்தில் சில வட்டங்களில் இத்திட்டம் செயல்படுகிறது. தமிழகத்தின் மற்ற எல்லா வட்டங்களிலும் 1980–81ஆம் ஆண்டிற்குள் இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

(ஆ) நகராட்சிகளுக்கு இத்திட்டத்தைச் செயல்படுத்த தற்போது உத்தேசமில்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இதே மாமன்றத்தில் அரசின் சார்பிலே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், குடிசைவாசிகளுக்கு, குடிசை வாசலிலேயே மருத்துவ வசதி வழங்கப்படும் என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டிருப்பது அமைச்சரவர்களுக்கு ஞாபகம் உண்டா? எந்த எந்த இடங்களில் அமுலாக்கப்படும் என்று நான் குறிப்பாக கேட்டுள்ள இடங்களை அவர்கள் சொல்வார்களா? கோவை நகரத்தில், ஆயிரக்கணக்கான குடிசைகளில் ஒருபகுதியிலாவது உடனே இந்தத்திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இருக்கிற மக்கள், குடிசை வாழ் மக்கள், நல்ல சுகாதார வாய்ப்பைப் பெற வேண்டும், நோயற்ற வாழ்வைப் பெற வேண்டுமென்பதற்காக நடமாடும் மருத்துவ மனைத் திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்ததும் வீட்டு வாசலி

[திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்] [1979 மார்ச் 5

லேயே மருத்துவ வசதி துறையினுடைய உதவி கிடைக்கும் என்று இந்த அரசு அறிவித்ததும் நினைவிலே இருக்கிற காரணத்தால் தற்போது 230 ஆரம்ப சுகாதார நிலயைங்களில் இருந்து 3 மருத்துவப் பணியாளர்கள் கிராமங்களுக்குச் சென்று வருகிறார்கள். மீதமுள்ள 153 ஆரம்ப சுகாதார நிலயைங்களிலிருந்து பணியாளர்கள் செல்லும் இத்திட்டம் விரைவில் ஏற்பாடு செய்யப்படும். நகரங்களிலே இருக்கிற இது போன்ற குடிசைப் பகுதிகளிலே, நகர சபைகள் சார்பாக, பல்வேறு தனி தாய்-சேய் நல விடுதிகளும் பணியாற்றிக்கொண்டிருக்கின்றன.

[முற்பகல் 10–00]

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மொபைல் மெடிக்கல் யூனிட்டுக்கு மருந்துகள் சரியாக வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்காக ஒரு ஆண்டுக்கு எவ்வளவு செலவாகிறது? அதைக் கூட்டுவதற்கு அரசு உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, தற்போது 15 ஆயிரம் அளவுள்ள மருந்துகள் ஒவ்வொரு நடமாடும் மருத்துவ மனைக்கும் வழங்கப்படுகிறது. எந்த இடத்திலேயிருந்தும் இதுவரையில் மருந்துகள், நடமாடும்மருத்துவமனைக்குப்போகவில்லை என்று அறிவிப்பு வரவிலலை. . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதிபற்றி நினைவுக்குக் கொண்டுவருவாரானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், கிராமங்களுக்கு இந்தத் திட்டத்தை அமலாக்குவது இந்த அரசினுடைய முக்கியமான நோக்கமென்று குறிப்பிட்டார். பல நூற்றுக்கணக்கான கிராமங்களுக்குப் போக முடியாமல் இந்தத் திட்டத்திலே ஜீப் வசதி அளிக்க ஏற்பாடுகள் செய்யப்படவில்லையென்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? தெரியுமானால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ? நகரங்களிலே, குறிப்பாக கோவை நகரத்திலே அந்த நகராட்சிக்கும் அப்படிப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்படுமா ? குடிசைப்பகுதி மக்களுக்கும் நடமாடும் மருத்துவ மனை வாகனங்கள் மூலமாக மருத்துவ வசதி கிடைக்கச் செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இப்போது கொஞ்சம் கொஞ்சமாக நடமாடும் மருத்துவ துவ மனைகளுக்கு அந்த— ஜீப் என்று மாண்புமிகு உறுப்பினர்

1979 மார்ச் 5]

குறிப்பிட்டார்—அது ஜீப் அல்ல, நடமாடும் மருத்துவ மனைக்காக என்றே தனிப்பட்ட முறையிலே ஸ்டாண்டர்டு கம்பெனியாரால் செய்யப்படுகிறது, அந்த வாகனங்கள் வழங்கப்படுகின்றன. தற்போது 100 இடங்களிலே அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏனைய இடங்களுக்கும் ஒவ்வொன்றாக வந்தவுடன் அனுப்பி வைக்கப்படுகின்றன.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, வீட்டு வாயிலில் மருத்துவ வசதி என்ற அந்தத் திட்டத்தை மலை வாழ் மக்களுக்கும் விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மலைவாழ் பகுதி மக்களுக்கும் இந்தத்திட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பொ. முனுசாமி : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத்திலே இருக்கின்ற மருத்துவ மனைகளுக்கு சரியாக மருந்துகள் வரவில்லை என்று டாக்டர்கள் சொல்கிறார்கள். அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அந்த மருந்துகளை கூட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, எந்த ஊராட்சி மன்றத்திலே இருக்கின்ற மருத்துவர்கள், மருந்துகள் சரியாகக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள் என்று அவர்கள் தெரிவிப்பார்களானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.)